
# உடன்பிறப்பே... 17

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## பண்பாளர்

# பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன்

ஓவியம் : ரவி பேலட்



தமிழ்நாட்டு அரசியலில் ஆழக் காலூன்றி, அசைக்க முடியாத குன்றென நிலைத்து நிற்கிறது தி.மு.கழகம் எனும் மாபெரும் பேரியக்கம். இந்த இயக்கத்தை விமர்சிக்க வேண்டும் எனில், முன்யோசனைகள் அற்ற சிலருக்கு, முதலில் வந்து விழுவது, 'வாரிசு அரசியல்' என்பதுதான். இந்த விமர்சனத்திற்குச் சமீபத்தில் தத்துவார்த்த பதிலடி வழங்கினார் நமது முதலமைச்சர். "ஆமாம், வாரிசு அரசியல்தான் செய்கிறோம். நீதிக் கட்சியின் வாரிசுகள், திராவிட இயக்கத்தின் வாரிசுகள், தந்தை பெரியாரின் வாரிசுகள், பேரறிஞர் அண்ணாவின் வாரிசுகள், முத்தமிழறிஞர் கலைஞரின் வாரிசுகள், சனாதனத்தை எதிர்த்த சமூக நீதியின் வாரிசுகள்" என 'பொட்டில் அடித்தது' போல விளக்கம் தந்தார்.

புலம்புபவர்களுக்குப் புரியும், நீதிக்கட்சியின் வாரிசுகள்தான் திராவிடர் கழகமாகவும், திராவிடர் கழகத்தின் வாரிசுகள்தான் தி.மு.கழகமாகவும் வளர்ந்து நிற்கிறார்கள். அந்த வரலாற்றில் தங்களை இணைத்துக் கொண்டவர்களின் வாரிசு கள்தான் கழகத்தின் வரலாற்று வரிசையிலும் நிற்கின்றனர். அந்த வகையில், மதுரையின் முகமாக அடையாளம் காணப்பட்டவர் கழகத்தின் பண்பாளர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன். சுருக்கமாகச் சொன்னால், பி.டி.ஆர்.

### நீதிக் கட்சி வாரிசு!

நாத்திகப் பாசறையில் பயிற்சி எடுத்து, புதிய அரசியல் இயக்கத்தை, பேரறிஞர் அண்ணா உருவாக்கினாலும், வழிபாட்டு உரிமைகளில் ஜனநாயகம் பேணிய இயக்கமாக கழகம் இருந்தது. அந்த முகத்தைப் பி.டி.ஆர் பழனிவேல் ராஜன் வழியாக அறிந்துகொள்ள முடியும். கடவுள் மறுப்புக் கொள்கை பேசினாலும், மக்களின் வழிபாட்டு உரிமைக்குப் போராடியவர் பெரியார். அதேபோலவே, அண்ணா கண்ட கழகம், தமிழர் களின் அரசியல் உரிமைகளுக்கான இயக்கமாக இருந்தது. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் தீவிர அன்பர் என்றாலும், கழகத்தின் போராட்டக் களத்தில் பண்பாளர் பழனிவேல் ராஜன் உறுதியாக நின்ற காட்சியே அதற்குச் சான்று.

நீதிக் கட்சியின் தலைவர்களில் ஒருவராகவும், சென்னை மாகாண அரசின் முதல்வராகவும் இருந்த பி.டி.ராஜன் அவர்களுக்கு, நான்காவது குழந்தையாக 1932-ஆம் ஆண்டு பிறந்தவர் பழனிவேல் ராஜன். இலங்கையில் தொடக்கக் கல்வியும், பின்னர், குன்னூர், ஏற்காடு எனப் பள்ளிக்கல்வியை முடித்தவர், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பட்டமும், சென்னை சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பும் முடித்து, 1954-ஆம் ஆண்டில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டு, தொழிலைத் தொடங்குகிறார். அதே காலகட்டத்தில் அவரது தந்தையார் பி.டி.ராஜன் அவர்கள் அரசியலில் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கிறார். அவரோடு இணைந்து அரசியல் பணிகளில் ஈடுபடத் தொடங்கினார் பழனிவேல் ராஜன். அரசியல், ஆன்மிகம், தமிழ் எனப் பி.டி.ஆரின் அரசியல் வரலாறு தொடங்கியது.

### தென்மாவட்டக் கழகம்

மதுரை மண்ணில், கழகப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு ஆலடி அருணா, தா.கிருஷ்ணன் எனக் கழக முன்னோடிகளுடன் இணைந்து தென்மாவட்டங்களில் கழகம் காத்தவர் பழனிவேல் ராஜன். கழகம் முதன்முதலில் ஆட்சிப் பொறுப்பேற்ற 1967-ஆம் ஆண்டில், தேனி சட்டமன்றத் தொகுதியில் இருந்து வெற்றியைக் கொண்டு வந்தவர். கலைஞர் இரண்டாவது முறையாக முதலமைச்சராகச் செயல்பட்ட அவையிலும், பழனிவேல் ராஜன் அவர்கள் தேனி சட்டமன்ற உறுப்பினராகச் செயல்பட்டார்.

கழகத்தின் களச் செயல்பாடுகளில் ஆயிரம் போர் வீரர்கள் இருந்தாலும், படையணியை இயக்கும் வல்லவராக இருந்தவர் பி.டி.ஆர். 1974-ஆம் ஆண்டில் லண்டன் மாநகரில் நடந்த 24-வது காமன்வெல்த் மாநாட்டில் அரசின் சார்பில் கலந்துகொண்டவர் அவர். தமிழ்நாட்டின் கல்வி மேம்பாட்டில் அக்கறை கொண்ட அவர், கழக வழிகாட்டுதல்களுடன் பல நாடுகளுக்கும் சென்று கல்வி மேம்பாடு குறித்து அறிந்து வந்தவர். மிகுந்த இறை நம்பிக்கை கொண்ட அவர், அரசியல் பணிகளையும் அதே நிறைவுடன் செய்து வந்ததுதான் ஆச்சர்யம். நீதிக் கட்சித் தலைவரின் வாரிசாக இருந்து, அரசியல் கற்ற பி.டி.ஆர் அவர்கள், சமூக நீதிக் கொள்கையில் என்றைக்குமே சமரசம் செய்து கொண்டதில்லை.

#### பொறுப்புகள்

- 1967-தேனி சட்டமன்ற உறுப்பினர்
- 1971-தேனி சட்டமன்ற உறுப்பினர்
- 1972-1976 கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் தலைவர், சட்ட மேலவை உறுப்பினர்
- 1996-மதுரை மேற்கு சட்டமன்ற உறுப்பினர், சட்டப்பேரவைத் தலைவர்
- 2006-மதுரை மத்தி சட்டமன்ற உறுப்பினர்-இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்.

### மதுரைக்கு அக்கறை

மதுரை மாநகரின் வளர்ச்சிக்கு பல திட்டங்களைக் கொண்டு வந்து மக்கள் மனங்களிலும், கழகத்தினர் மனங்களிலும் இடம் பிடித்தவர் பழனிவேல் ராஜன். சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, ஒருங்கிணைந்த மாட்டுத்தாவணி பேருந்து நிலையம், மதுரை மாநகராட்சியின் சுற்றுச்சூழல் பூங்கா ஆகியவை அவரது முயற்சியில் கொண்டுவரப்பட்டவை. பாலங்கள், சுற்றுச் சாலைகள் எனக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்கும் போதெல்லாம், கலைஞரிடம் உரிமையுடன் கேட்டுப் பெற்ற திட்டங்கள் என்றைக்கும் அவர் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கும். கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் தலைவராக அவர் பதவி வகித்த காலத்தில்தான், மதுரையின் கிராமிய முகம் மாறத் தொடங்கி, நகரமாக வளர்ச்சி கண்டது. புறநகர்களில் நகர விரிவாக்கம் கண்டது.

**பேரறிஞர் அண்ணா காலம் தொட்டு கழகத்தின் மீது மாறாத பற்று கொண்ட அவர், கலைஞரின் அன்புக்கும் பாத்திரமானவராக என்றென்றும் இருந்தார்.**

பேரறிஞர் அண்ணா காலம் தொட்டு கழகத்தின் மீது மாறாத பற்றுக் கொண்ட அவர், கலைஞரின் அன்புக்கும் பாத்திரமானவராக என்றென்றும் இருந்தார்.

1996 ஆம் ஆண்டு இவர் சபாநாயகராக வீற்றிருந்த காலம், சட்டசபை வரலாற்றின் மிகச் சிறப்பான காலம். எதிர்க்கட்சி உறுப்பினர் களுக்கும் வாய்ப்புகளை அளிப்பதில் சமநிலை தவறாதவர். கழகத்தின ருக்கே உரிய வேகம் இருந்தாலும், அவை மாண்புக்கு உரிய கண்ணியத்தை நிலை நாட்டியவர். 2006-ஆம் ஆண்டில், தனது அமைச்சரவை யில், பி.டி.ஆருக்குப் பிடித்த மான இந்து சமய அறநிலையத் துறை அமைச்சராகப் பொறுப்பு வழங்கி, அழகு பார்த்தார் கலைஞர். அந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு, மதுரை திரும்பும் வழியிலேயே அவர் மறைந்ததுதான் கலைஞரின் துயரமாக அமைந்தது.

"பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் என்றால், அவருடைய கண்ணியம், அடக்கம், உன்னதம் ஆகியவையே தன் நினைவுக்கு வரும்" என, அவரது மறைவின்போது எழுதினார் கலைஞர். 2008-ஆம் ஆண்டு மதுரையில், அவருக்குச் சிலை நிறுவி, அதைத் திறந்து வைத்துப் பெருமை சேர்த்தார். பண்பாளர் என எதிர்க்கட்சியினரும் புகழ்பாடும் அரசியலுக்குச் சொந்தக்காரர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன். அதுதான் கழகத்தின் பண்பாடு. அதுதான் திராவிட அரசியல். அதை அறிவதே அரசியல் செயல்பாடு.

...துடிக்கும்


## "இது மக்களுக்கான நாடு!"

மதங்களுக்கான நாடு அல்ல இந்தியா, மக்களுக்கான நாடு என்கிற குரலை உயர்த்த வேண்டிய நிலைக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு தள்ளியுள்ளது. ஆட்சி அதிகாரத்துக்கான வகுப்புவாதக் கலவரங்களைத் திட்டமிட்டு தூண்டி வருவதாக பா.ஜ.க. மீது தொடர் குற்றச்சாட்டுகள் உண்டு. அதற்கேற்ப எதிர்வரும் தேர்தல்களைக் கணக்கிட்டு, வகுப்புவாதக் கலவரங்களுக்குப் பா.ஜ.க. மற்றும் அதன் ஆதரவு அமைப்புகள் முயற்சி செய்வதை ஹரியானா மாநிலக் கலவரம் உணர்த்துகிறது.

மணிப்பூர் மாநிலத்தின் கலவரச் சுவடுகளே மாறாத நிலையில், ஹரியானாவில் இஸ்லாமிய மக்கள் மீது குறிவைத்து நிகழ்த்தப்பட்டுள்ள வன்முறை, உயிர்ப்பலி, சொத்துச் சேதம் எல்லாம் பெரும் சேதத்துக்கு நாட்டினைக் கொண்டு செல்லும் எனவும் எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை செய்கின்றன. அம்மாநிலத்தை, பா.ஜ.க. ஆளும்நிலையில், அமைதியை நிலை நாட்டவேண்டிய முதலமைச்சர் மனோகர் லால் கட்டாரோ, "எல்லா மக்களுக்கும் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாது" என்கிறார்.

இப்படியான ஊக்குவிப்புகளே கலவரக்காரர்களுக்கு ஆதரவாக அமைகின்றன. அமைதியின்மையை உருவாக்கி, மக்களைத் திசை திருப்பும் அரசியல் உத்தி பா.ஜ.க.வுக்குக் கை வந்த கலையாக உள்ளது. இந்தச் சூழலில், அனைத்து மதங்களுக்குமான நாடு இந்தியா என்கிற முழக்கத்தை உயர்த்த வேண்டிய அவசியத்தை 'இந்தியா' கூட்டணி உயர்த்திப் பிடிக்கும்.

## :ப்ளாஷ்பேக்





வடிவேல்

### உடன்பிறப்புகளுக்கு உற்சாகம்!

1965-ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்புப் போராட் டத்தில் கலந்துகொண்டபோது எனக்கு வயது 23. கழக உறுப்பினராகவும் அதே காலகட்டத்தில் பதிவுசெய்து கொண்டேன். ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட நிகழ்ச்சிகளுக்கு 1981-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வருகை தந்த கழகத் தலைவர் கலைஞர், ஒட்டன்சத்திரத்திற்கு வருகை தந்து கழகக் கொடியேற்றி வைத்தார். அன்றைய மதுரை மாவட்டச் செயலாளர் பொன். முத்துராமலிங்கம் அவர்களும் அவ்விழாவில் சிறப்புரையாற்றினார். ஒன்றியச் செயலாளராக இருந்த நான், அந்த விழாவுக்குத் தலைமை வகித்தேன். கொடியேற்றி வைத்து, தலைவர் ஆற்றிய உரை, அங்கு திரண்டிருந்த உடன்பிறப்பு களுக்கு உற்சாகமூட்டியது.

**-ச.வடிவேல்,**
**முன்னாள் ஒன்றியச் செயலாளர்,**
**மொழிப்போர் வீரர், ஒட்டன்சத்திரம்,**
**திண்டுக்கல் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தாக்குதல்கள்!

**1981-ஆம் ஆண்டு, செப்டம்பர் 3-ஆம் தேதி, தூத்துக்குடியில் கழக நிகழ்ச்சியில் கலந்துகொண்டார் கலைஞர். அந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு, இரவு 7.30 மணி அளவில் விளாத்திக்குளத்தில் நடைபெறும் மற்றொரு நிகழ்ச்சிக்காகப் புறப்பட்டார். தூத்துக்குடி உப்பளம் பகுதியில் கலைஞரின் கார் வந்தபோது, காருக்கு முன்னால் வெடிகுண்டு வீசப்பட்டது போல சத்தம் எழுந்தது. காரின் முன்பக்க கண்ணாடி அப்படியே நொறுங்கி, கலைஞர் மீது கொட்டியது. தாக்கியவர்கள் இருட்டுக்குள் பதுங்கினர். அதற்கு முன்னர் ராதாபுரத்தில் கலைஞர் கார் மீது உளித்தாக்குதல் நடந்தது. இந்தத் தாக்குதல்களையும் மீறி, இதுபோன்ற கழக நிகழ்ச்சிகளுக்குப் பயணப்பட்டுக் கொண்டே இருந்தார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 200




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131